# உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் ஆர்ப்பாட்டம்

மதுரை/திருப்பரங்குன்றம், ஜூலை 4: புதிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்தி, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை முன் வழக்குரைஞர்கள் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுரை ஒத்தக்கடை அருகே உள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை முன் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை (எம்எம்பிஏ) வழக்குரைஞர்கள் சங்கம் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்தியதைக் கண்டித்தும், அவற்றைத்திரும்ப பெறவலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பினர். இதில் மூத்த வழக்குரைஞர்கள் ஹென்றி திபேன், ஐசக் மோகன் லால், லஜபதிராய், அஜ்மல்கான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை முன் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வழக்குரைஞர்கள்.

திருப்பரங்குன்றம்: இதே கோரிக்கையை வலியுறுத்தி திருமங்கலம் நீதிமன்றம் அருகே நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். செயலர் அறிவொளி முன்னிலை வகித்தார்.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், மூத்த வழக்குரைஞருமான சாமிநாதன், துணைத் தலைவர் கண்ணன், இணைச்செயலர் விஜய், பொருளாளர் தினேஷ் பாபு, ரவிச்சந்திரன், கவிஸ்ரீ தினேஷ் உள்ளிட்ட வழக்குரைஞர்கள் பங்கேற்றனர்.